

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு ஒன்றிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு.ஆ. பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தேனியல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ.

(பெயரில்லாப் படைப்புகள் பொறுப்பாசிரியர் எழுதுவன.)

சுவடி 22] ௨௦௧௭ விடை-ஆடவை-(சூன்-ஆகசுடு 1986) [ஓலை 7-8

புதிய கல்விக் கொள்கை!



ஐரோப்பிய ஆரியர், இந்தியாவுக்குத் தன்னுரிமை தந்து, தம் வழிப் பாங்கினராகிய இந்திய ஆரியப் பார்ப்பனரிடம் இந்தியாவை ஒப்படைத்த பின்னர், அதை என்றென்றும் தம் அரசியல் அதிகாரப் பிடியிலேயே வைத்திருக்க வேண்டும் என்பதுதான் நேருப் பார்ப்பனக் குடும்பத்தாரின் கடந்த நாற்பதாண்டுக் கால முயற்சிகளும். அதற்குகந்த

வகையில் அடிப்படையாக எந்தெந்த நிலைகளைத் தாங்கள் வலுப் படுத்திக்கொள்ள வேண்டுமோ, அதையதை யெல்லாம் படிப் படியாக வலுப்படுத்திக் கொண்டே வந்துள்ளனர்.

ஆட்சியதிகாரம் என்பது கையிலுள்ள ஒரு மந்திரக் கோலைப் போன்றது. அதை யார் கையில் பிடித்திருந்தாலும், பிறருடைய கருத்துகளுக்கு அவர் மதிப்புத் தருவார் என்று எதிர்பார்ப் பதற்கில்லை. அந்த மந்திரக்கோலை ஒருவரிடமிருந்து மற்றொருவர் பறித்துக் கொள்வதும், அல்லது அவ்வாறு பறிக்குங் கொள் ளாமல் தடுக்கப் பெறுவதுமே, பெரும்பாலும் அரசியல் என்று கூறப் பெறுகிறது. மற்றபடி ஆட்சியமைப்பை அரசியல் என்று கூறும் நாகரிகப் பண்பாட்டு மாந்தவியல் கூறுகள் மலையேறி நீண்ட நாள்கள் ஆகிவிட்டன.

அவ் வாட்சியதிகாரச் சூழ்ச்சிக்காரர்களால், ஏதாவது ஒரு கொள்கை, மக்கள்மேல் திணிக்கப்படும் ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒவ்வொரு காரணம் சொல்லத்தான் பெறும். ஆனால், பின்னர், அக் காரணம் சரிவரச் செயல் படாமல் போகும் பொழுதோ, முன்னர் புகுத்தப்பட்ட அக் கொள்கை தகுதியற்ற கொள்கையாகச் சொல்லப்பட்டு விடுகிறது. அதற்குள் மக்கள் வரிப்பணமும் முயற்சியும் காலமும் ஏராளமாக வீணாகிப்போய் விடுகின்றன. ஆனால், அக் கொள்கை பற்றி முன்னர் வாய் கிழியப் பேசி, அதை நடைமுறைக்குக் கொண்டு வந்து பேரிழப்புச் செய்தவர்களோ. பின்னர் தண்டனையில்லாமல் தப்பித்துக் கொள்கின்றனர். இவற்றுக்கு எடுத்துக்காட்டுகளாக வரலாற்றில் நிற்பவையாக நேருவின் பஞ்சசீலக் கொள்கை, தீண்டாமை ஒழிப்புக் கொள்கை, வார்தா கல்வித் திட்டம், ஐம்பேராய (பஞ்சாயத்து) ஆட்சிமுறை, தேசியக் கல்விக் கொள்கை, மதுவிலக்குக் கொள்கை முதலியவற்றைச் சொல்லலாம்.

கடந்த பேராயக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இதே கல்விக் கொள்கைக்காக ஏழெட்டு ஓராள் ஆய்வுக் குழுக்கள் அமர்த்தப் பெற்று, புதுப்புதுத் திட்டங்கள் அறிவிக்கப் பெற்றுள்ளன. அவை,

வாரதாக் கல்வித் திட்டம்;

மாண்டி சோரிக் கல்வித் திட்டம்;

முதியோர் கல்வித் திட்டம்;

குலக் கல்வித் திட்டம்;

பர். இலக்குமணசாமி கல்வி ஆய்வுக் குழு பரிந்துரைத்த திட்டம்;

பர். இராதாக்கிருட்டிணன் கல்வி ஆய்வுக்குழு பரிந்துரைத்த திட்டம்;

பேரா. கோத்தாரி ஆய்வுக்குழு பரிந்துரைத்த தேசியக் கல்வித் திட்டம்;

பர். சட்டோபாத்தியாயா கல்வித் திட்டம்;

முதலியவை ஆகும். ஆனால், இவையெல்லாம் ஏட்டளவோடு சிலவும், திட்ட முயற்சிகளோடு ஒன்றிரண்டும், வெற்றியடையா மற்போன செயல் முயற்சிகளோடு ஒன்றிரண்டும், தோல்விகளைத் தழுவிய ஒன்றிரண்டுமாக, அரசின் அடிப்படையற்ற, வீணான செலவுகளுக்கு உட்படுத்தப்பட்ட திட்டங்களாகவே போயின. கோத்தாரிக் குழுவினரால் பரிந்துரைக்கப் பெற்ற தேசியக் கல்வித் திட்டம் 1964 முதல் 1968 வரை ஆய்வு செய்யப்பெற்று, 1968 இல் அரசினரால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பெற்றுப் பெரும் பொருட்செலவில் வெற்றியடையாமற் போனதை அர சுச்சார்பில் உள்ளவர்களே சுட்டிக் காட்டுகின்றனர். அத் திட் டத்தின் முகாமையான இரண்டு கோட்பாடுகளே, தேசியக் கல்வி முறையை உருவாக்குதலும், முன்னுள்ள கல்விமுறையில் உள்ள ஏற்றத் தாழ்வுகள், குறைபாடுகளை நீக்குதலும் என்றே அறிவிக்கப் பெற்றன. இப்பொழுதும் அவையே மீண்டும் வலி யுறுத்தப் பெற்றுள்ளன. ஆனால், கோத்தாரி குழுவினரால் பரிந்துரைக்கப் பெற்ற 1968 ஆம் ஆண்டின் தேசியக் கல்வித் திட்டத்தில், தாய்மொழியைப் பாடமொழியாக்க ஊக்குவிக்க வேண்டும் என்னும் நோக்கத்திற்கு நேர்மாறானது, இப்பொழுது இராசீவ் காந்தியால் அறிவிக்கப் பெற்றிருக்கும் புதிய கல்விக் கொள்கைத் திட்டம். எல்லாப் படிவங்களிலும் தாய்மொழி வழி யாகவே கல்வி கற்பிக்கப் பெறவேண்டும் என்பது, கோத்தாரி குழு பரிந்துரையில் உள்ள சிறப்புக் கூறு. ஆனால். இப்பொழுது அறிவிக்கப் பெற்றுள்ள புதிய கல்விக் கொள்கையில் மாநில மொழிகளுடைய தேவையும் வளர்ச்சியும் அடித்து நொறுக்கப் பெற்று அறவே அழிக்கப் பெற்றிருக்கின்றன. இத்திட்டம் முழுச் செயல் முறைக்கு வரவிருக்கும் ஏழு ஆண்டுகளில் மாநில மொழிகளில் பயில்வதை மட்டும் மன்று, மாநில மொழி களையே எவரும் விரும்ப மாட்டார்கள் என்னும் நிலையையே, இப் புதிய கல்விக் கொள்கை உருவாக்கப் போகிறது. மாநிலங்களில் உள்ள தேசிய இன மக்கள் தம் தாய்மொழிகளில் பேசுவதையே மதிப்புக் குறைவாகவும் தாழ்வாகவும் கருதும் அளவுக்கு ஆக்கப் பெற்று விடுவார்கள் என்பது திண்ணம்.

தேசிய உணர்வு என்பது ஏதோ புரியாத புதிர் அன்று. பார்ப்பனிய - முதலாளியக் (Brahmin Capitalism) கருத்துகளை யும் அவற்றுக்கான அடிப்படைகளையும் வளர்க்கின்ற உணர்வு என்பதே! எங்கோ, தமிழினத்தைக்காட்டிக் கொடுக்கும்மூப்பனார் களும், பழனியாண்டிகளும், சிதம்பரங்களும், பக்தவத்சல சுப்பிரமணியன்களும் ஆக சிற்சிலபேர், இத்தேசிய உணர்வு ஒருமைப்பாடு என்பவற்றிற் கெல்லாம் வேறுவேறு பொருள்களை அவர்கள் பெறுகின்ற வாய்க்கரிசிகளுக்குக் கைமாறாக, விளக்கங் களைக் கூறி வந்தாலும், அதன் உண்மையான பொருள் மேலே கூறியதே! ஒருவேளை அப் பொருள் அவர்களுக்கு விளங்கா மலிருந்தால், அஃது அவர்களின் அறியாமையே?

இப் புதிய கல்வித் திட்டத்திற்கு ஏறத்தாழ 500 கோடி உருபா செலவு செய்ய நடுவணரசு திட்டமிட்டுள்ளது. நடை முறை ஆண்டில் நாடு முழுவதிலும் தேர்ந்தெடுக்கப் பெற்ற மாவட்டங்கள் அளவில், 60 பள்ளிகளே திறக்கப்பெற விருக்கின்றன என்றாலும், இவ் வேழாண்டுத் திட்ட இறுதியில் நாட்டில் 428 பள்ளிகள் இருக்கும் என்று கூறப்பெறுகிறது. அக்கால் மாவட்டத்திற் கொன்றாக அவை செயல்படும் என்றும் திட்டமிடப் பெற்றுள்ளது. முதலாண்டில் ஆறாம் வகுப்புகள் வரையில் மட்டுமே உள்ளனவாக இருக்கும். அப் பள்ளிகள் படிப்படியாக விரிவாக்கம் செய்யப் பெறுகையில், ஏழு ஆண்டுக்குள் அவற்றுள் 12 ஆம் வகுப்பு வரை உள்ளனவாக அமைக்கப் பெறும் என்பது திட்டம்.

இந்தியாவில், இன்றைய நிலையில் ஏறத்தாழ 60 ஆயிரம் மேல்நிலைப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. அவற்றுடன் 5 ஆயிரம் கல்லூரிகளும், 150 பல்கலைக் கழகங்களும் நாட்டில் உள்ளன. இவற்றைக் கொண்டெல்லாம் செய்துகாட்ட முடியாத, முன்னேற்றங்களையும், கருத்து வளர்ச்சிகளையும் ஏழாண்டு முடிவில் அமைக்க விருக்கின்ற 428 மொத்த எண்ணிக்கை கொண்ட பள்ளிகளாலேயே செய்துவிட முடியும் என்று எதிர்பார்ப்பதும், அதனடிப்படையில் அவற்றுக்கென ஏராளமான பொருளைச் செலவிடுவதும் எத்துணை அறியாமை !

அரசின் பணம் என்பது மக்கள் வரிப்பணமே. இதை மக்கள் அனைவர்க்கும் பரவலாகச் செலவழிக்கும் திறமையும், கடமையும் அரசுக்கு உண்டு. ஆனால், அதை விடுத்து அவ் வரிப் பணத்தில் பெரும் பகுதியை மக்களில் ஒரு சாரார்களே, குறிப்பாக முன்னேறிய மேல்தட்டு மக்களே - இன்னும் குறிப்பாகச் சொன்னால் பார்ப்பனர்களும், மிக முன்னேறிய செல்வர்களுமே பயன் பெறுமாறு, ஒரு கொள்கையை அரசு அறிவிப்பது நாட்டில் உள்ள பின்தங்கிய மக்களுக்குக் கேடானதும், ஓர வஞ்சகமானதும், கொடுமையானதுமே ஆகும். இதைத் தட்டிக் கேட்கும் உரிமைகூட அப் பெரும்பான்மை மக்களுக்கில்லாமல் இருப்பது, அதைவிடப் பெருங் கொடுமையாகும்.

இத்துணையளவு பெருஞ்செலவு கொண்டதும், நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்குப் பயன் படாததுமாகிய இப் புதுக் கல்விக் கொள்கையின் உண்மையான உள்நோக்கங்கள் தாம் எவை என்பதைக் கட்டாயம் நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல் மிகவும் இன்றியமையாத தாகும்.

இப் புதுக் கல்விக் கொள்கையால் நடுவணரசு, அஃதாவது இராசீவ் அரசு வினைவிக்க நினைப்பது :

1. இந்தியை மறைமுகமாகவும், நிலையாகவும் ஒரே தேசிய மொழியாக இந்நாட்டு மக்களை ஏற்றுக்கொள்ளச் செய்வது.

2. இந்திய - அஃதாவது - பாரதப் பண்பாடு என்று கருதப் பெறும் இந்து மதக் கோட்பாடுகளையும், அம் மதத்திற்குச் சார்

பாக ஆக்கி வைத்திருக்கும் பிற தேசிய இனச் சமயக் கோட்பாடுகளையும், அவை சார்ந்த மெய்ப்பொருள் கொள்கைகளையும் நிலையாகத் தமதாக்கிக் கொள்வதுடன், இந்தியத் தேசியம் என்னும் பெயரால் பிற மாநில உணர்வுகளை, மொழிகளை, வரலாற்றை, அவற்றின் தனிப்பட்ட கலை, பண்பாடுகளை அழிப்பது.

3. குமுகாயத்தில் சாதியால், பொருளால் மிகவும் முன்னேறிய மேல்தட்டு மக்களே தொடர்ந்து நன்மை பெறுவதற்கு வாய்ப்பளிப்பது. இதற்குத் தகுதி, திறமை என்னும் பொது மாந்த வளர்ச்சிக்குத்தடையான அளவு கோள்களைமேற் கொள்வது.

ஆக, இம்மூன்று நிலையான தீமைகள் இப்புதிய கல்விக் கொள்கையால் நேரும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

நாட்டில் உள்ள எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை ஏறந்தாழ 40 கோடியாகும். மொத்த மக்கள் தொகை ஏறத்தாழ 70 கோடி. ஏழாண்டின் இறுதியில் இப் புதுக் கல்விக் கொள்கையால் பயன்பெறப் போகும் மாணவர்களின் எண்ணிக்கை (இத் திட்டப்படி எல்லாம் சரியாக நடந்தால், ஒரு மாவட்டத்திற்கு 960 மாணவர்கள் மேனி, 480 மாவட்டங்களிலும்) 4 இலக்கத்துப் பத்தாயிரத்து, எண்ணூற்று எண்பது ஆகும். ஏறத்தாழ நாலே கால் இலக்கம் பேர். இது மொத்த மக்கள் தொகையில் 0·006 விழுக்காடு ஆகும். இவ்வளவு சிறிய அளவு மாணவர்களுக்காக இவ்வளவு பெருஞ்செலவும் பேருழைப்பும் கொண்ட ஒரு திட்டத்தைச் செய்வதற்குத் தேசியம் என்ற பேராசையும் இந்திமேல் உள்ள வெறித்தனமும் அதிகாரச் செருக்கும் தவிர வேறு காரணம் இருக்க முடியாது.

இப் புதிய முறையை அறிமுகப் படுத்துகையில், இப்பொழுது உள்ள பழைய கல்வி முறையில் பல குறைகள் சுட்டப்பெறுகின்றன. ஆனல், அவற்றை இல்லாமற் செய்துவிடும் வரையறுக்கப் பெற்ற செயல்முறைக் கோட்பாடுகள் புதியமுறையில் சொல்லப் பெறவில்லை. எடுத்துக்காட்டுக்கு ஒன்று :

பழைய (அஃதாவது இப்பொழுதுள்ள - அஃதாவது தொடங்கவிருக்கும் புதுப் பள்ளிகள் தவிர, மீதமுள்ள, பல்லாயிரக்கணக்கான - அப்படியே இருக்கப்போகும்) பள்ளிகளில் - சாதி, மத, இன உட்பூசல்கள் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கட்டுப்படுத்த முடியாத நிலையில் உள்ளனவாக அரசு அறிக்கையில் காட்டப் பெற்றுள்ளது.

ஆனல், புதுக் கல்விக் கொள்கையின்படி, இக்குறைகள் எவ்வாறு தீர்க்கப் பெறப் போகின்றன என்பது கூறப்பெறவில்லை.

மேலும், இப்புதிய கல்விக் கொள்கை, இந்திய அரசியல் அமைப்பில் சட்ட நோக்கத்திற்கு மாறானதும், அதைச் செயல்படுத்த விடாமல் தடுப்பதுமாகும்.

இந்திய அரசின் அமைப்பியல் சட்டத்தின் 29 ஆம் நெறி முறையில் உள்ள இரு கட்டளைகளும் கீழ்வருமாறு கூறுகின்றன.

1. இந்திய எல்லைக்குள் வாழ்கின்ற, தமக்கெனத் தனி மொழி, வரிவடிவம் அல்லது பண்பாடு உள்ள குடிமக்களுக்கு அவற்றைப் பேணிக் காப்பதற்கான உரிமை இருக்கிறது.

2. சமயம், சாதி, இனம், மொழி அல்லது இன்ன பிற வேறுபாட்டின் (அஃதாவது தகுதி, திறமை முதலியவை போன்றவற்றின்) காரணமாக, (இந்தியாவில் உள்ள) எந்தக் குடிமகனுக்கும் அரசால் அல்லது அரசு உதவித் தொகையால் நடத்தப்படும் கல்விச் சாலைகளில் அனுமதி அளிப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கக் கூடாது.

இவ் வமைப்பியல் சட்டம் தருகின்ற உரிமையை, இப் புதிய கல்விக் கொள்கை வலியப் பறித்து விடுகிறது.

ஒவ்வொரு மாணவனும், 3 மொழி கற்கவேண்டும். இந்தியை அனைவரும் கட்டாயமாகக் கற்கவேண்டும். இரண்டாவது ஆங்கிலம். இவை தவிர, வேறு மாநிலங்களிலிருந்து வரும் பிற 20 விழுக்காட்டு மாணவர்கள் மட்டும் 3 ஆவது மொழி ஒன்றைக் கற்கவேண்டும். ஆனால், அவ்வம் மாநிலத்திலேயே உள்ளவர்கள் தங்கள் தாய்மொழியையோ, அம் மாநில மொழியையோ விரும்பினாலும் கற்கமுடியாது.

இந்தி பேசாதவர்களிடையில், மும்மொழித் திட்டத்தை வலியுறுத்தவே இவ்வேற்பாடு என்பதை அனைவரும் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் தேசியம் என்னும் பெயரால், இப்பொழுது தில்லித் தொலைக்காட்சி, வானொலிகளில் வரும் கதைகளும், கருத்துகளுமே இனி மாதிரிப் பள்ளிப் பாடப் பொத்தகங்களிலும் வரும். இப்பொழுது போலவே அவற்றையும் யாரும் உரக்கவோ மெல்லவோ கூட கேட்க முடியாது.

மொத்தத்தில் பார்ப்பனீயம் அறிவியல் அடிப்படையின் ‘புதிய கல்விக் கொள்கை’ எனும் மெருகு பூசிக் கொண்டு நடை யிடப் பார்க்கின்றது.

நாட்டில் இன்னும் மிகப் பெரும்பான்மையாக இருக்கின்ற ஏழை, எளிய, கல்லாத மக்களுக்கென்று உணவு, உடை, உறைகளுக்காகச் செலவிட வேண்டிய வரிப்பணத்தில், பட்டு மெத்தைக்காரர்கள் அறிவு நலம் காணப்போகின்றார்கள்.

பார்ப்பனர்களும் முதலாளிகளும் கைகோத்துக் கொண்டு, இந்தியாவையே பார்ப்பனீய மயமாக்கப் பார்க்கிறார்கள்,

கீழ்த்தட்டு மக்களை, மேல்தட்டு - முன்னேறிய மக்களுடன் சரிசமமான கோட்பாட்டின் கீழ் போட்டி போட வைப்பது எந்த வகையில் சரியான நடைமுறையாக இருக்கமுடியும்?

பொதுவுடைமை உணர்வுள்ளவர்களும், தமிழின நல உணர்வுள்ளவர்களும் ஆழ்ந்து சிந்தித்து நிலையான முடிவு பற்றி எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். 0

நாலடியாரும், உலகியல் நூறும் - ஓர் ஒப்பாய்வு!

-கடலூர் மணிமாறன்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் முதலாவதாகக் குறிக்கப் பெறும் தகுதியுடையது நாலடியார். நான்கு அடிகளையுடைய வெண்பாக்களால் ஆன இந் நூல் சமண முனிவர்களால் எழுதப் பெற்றது என்பர். இம் முனிவர்கள் பாண்டிய நாட்டு மதுரை மாநகரத்து உக்கிரப் பெருவழுதி என்னும் அரசனால் புரக்கப் பெற்றோர் ஆவர். ஒருவரே இந் நூல் எழுதியிருக்கக்கூடும் என்ற எண்ணமும் இப் பாடல்களை ஆய்ந்து நோக்குவார்க்குத் தோன்றும்.

''அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே''[1] என்ற நெறிக்கேற்ப இந் நூல் இம்மையில் இன்பம் பெறுவதையும் உடல், பொருள் நிலையாமையை உணர்ந்து அவற்றில் நசை யற்றுத் துறவுநெறி யறிந்து வீடுபேறு அடையும் வழி தேடிக் கொள்வதையும் வலியுறுத்துகிறது. ''இந் நாலடியாருக்கு''ப் பதுமனார் என்பவர் அதிகார அடைவு ஏற்படுத்தி அவ்வதிகார அடைவுக்கு ஏது கூறி ஒரு பொழிப்புரையும் எழுதியுள்ளார்.[2]

பாவேந்தர் பாரதிதாசனுக்குப் பின்னால் இன்று நம்மோடு வாழ்ந்து வரும் பாவலர்களுள் முதன்மையானவராக மதிக்கப் பெறு பவர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** ஆவார். இவரால் எழுதப் பெற்ற எண்ணற்ற இலக்கியங்களுள் நூறு வெண்பாக்களால் ஆகிய **'உலகியல் நூறு'** என்பதும் ஒன்றாகும். உயர்ந்த வாழ் வியல் நெறிகளை வகுத்தும்-தொகுத்தும் உரைக்கவல்ல ஓர் அறி விலக்கியமாகவும். அறவிலக்கியமாகவும் இது திகழ்கிறது. இவ் விரு நூல்களும் தோன்றிய காலப்பின்னணி, மக்கள் வாழ்வியல் பின்னணிகளைக் கொண்டு ஒப்பிட்டு ஆய்வது இக் கட்டுரையின் நோக்கம்.

உலகியல் உண்மைகளைப் பட்டறிவின் வழியே துய்த் துணர்ந்து அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிகளைத் தெள்ளி தின் உணர்த்தும் கொள்கை வயப்பட்டனவாக இரு நூல்களும் விளக்குவதே இவற்றை ஆய்தற்குரிய கருதுகோள் ஆகும்.

அறத்துப்பாலில் 13 அதிகாரங்களும், பொருட்பாலில் 26 அதி காரங்களும், காமத்துப்பாலில் ஓர் அதிகாரமும் ஆக 40 அதிகாரங் களை (திருக்குறள் போலவே அதிகாரத்துக்குப் பத்துப் பாடல்கள்) கொண்டுள்ளது நாலடியார். இருபது இயல் பிரிவுகளையும் அவற் றின் உள்ளடக்கமான நூறு நிலைப் பிரிவுகளையும் உடையது உல கியல் நூறு.

எவ்வெக் கருத்துகளை, எவ்வெப் பாக்களில் அமைக்க வேண்டுமென்பது தமிழ்ப் புலவர்கள் தொடர்ந்து பின்பற்றிவரும் நெறிமை.

மகபுகுவஞ்சியை வஞ்சிப்பாவிலும், வாழ்வியல் முப்பதை இரு தூக்காக வந்த அறுசீர் ஆசிரிய மண்டிலப் பாவிலும், எண்சுவை என்பதைச் சிந்தியல் வெண்பாவிலும், நூருசிரியத்தை ஆசிரியப் பாவிலும் பாடியுள்ள பாவலரேறு பெருஞ்சித்திரனுர் உலகியல் நூற்றையும் பெரும்பாலான அறநூல்களைப் போல வெண்பாவில் பாடியிருப்பதும், உலகியலை முதல் இயலாக வைத்துப் "புடவிபல ஒன்று கடல் புன்மணலிஞ் ஞாலம் (பா-1) என்றவாறு முதல் வரியிலேயே ஞாலத்தைச் சுட்டியிருப்பதும் இவரது மரபுவழுவாமையைப் புலப்படுத்துவனவாகும்.

சமண முனிவர்கள் பாடிய நூலாதலின் முற்பிறப்பு, பழவினை, மறுமை, கூற்றம், நரகம், வீட்டுலகம் தொடர்பான செய்திகள் நாலடியாரில் மிகுதியும் இடம் பெற்றுள்ளன. உலகியல் நூறும் இறுதியாகவுள்ள இறைமையியலில் ஒருமை நிலை, இருமை நிலை, உண்டிலை நிலை, தெளிவு நிலை, ஒப்பு நிலை ஆகிய ஐந்திலும் வடிவமற்ற ஓர் இறைமையின் பேராற்றலை விதந்துரைக்கிறது.

விடுதலறியா விருப்புடன் உழலும் இவ்வுலக வாழ்வில் யாக்கை நிலையாமையை உணர்த்த வந்த நாலடியார்,

"கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும் - மணங்கொண்டீண்
டுண்டுண்டுண் டென்று முணர்வினன் சாற்றுமே
தொண்டொண்டொ டென்னும் பறை"3

என்னும் பாடல் வழி உலகியல் உண்மையை ஓவியமாய்க் காட்டுகிறது.

உலகியல் நூறும் இறப்பியலில் நிலையாமை நிலை என்னும் தலைப்பில்,

"புறத்துப் புதுமை அகப்பழமை போற்றல்
துறத்தல் உயிரியல்பு தோன்றல் - பிறத்தலென்ப
ஒன்றெய்த வொன்றழியும் உண்மை நிலையாமை
என்றுமுள தோற்றம் இறப்பு"4

என்ற பாடலில் ஒரு பொருள் புதியதொரு தோற்றம் பெறுகையில் பழைய தோற்றம் அழிகிறது என்றும், நிலையாமை என்பது பொருள்களின் உண்மைத் தன்மை என்றும் குறிப்பிடுவது ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

இவ்விரு நூல்களுமே நேரிசை வெண்பா யாப்பும், இன்னிசை யாப்பும் விரவப்பெற்று அமைந்துள்ளமை கருத்திற் கொள்ளத் தக்கதாகும். உயர்வரை நன்னுட (77) ஓங்கருவி நாட (79) பொருகடற்றண் சேர்ப்ப (97) மைதவழ்வெற்ப (142) போன்ற பல இடங்களில், ஆடூஉ முன்னிலைகளும் நறுமலர்த் தண்கோதாய் (209) வேனெடுங்கண்ணுய் (265) நன்மலர் மேற்பொற்பாவாய் (266) நானங்கமழும் கதுப்பினுய் (294) போன்ற இடங்களில் மகடூஉ முன்னிலைகளும், நாலடியாரில் பேரளவு இடம் பெற்றுள்ளன. உலகியல் நூறில் இத்தகைய ஆடூஉ, மகடூஉ முன்னிலைகள் இடம் பெறவில்லை.

பெருமை, மானம், அறன்வலியுறுத்தல், ஈகை, கல்வி, பொறையுடைமை, நட்பாராய்தல், சுற்றந்தழால் போன்ற நாலடியாரின் அதிகாரத் தலைப்புக்களில் பல திருக்குறளோ டொத்துத் தோன்றுகின்றன. உலகியல் நூறில் இயல் தலைப்புகளும், நிலைத் தலைப்புகளும் சொல்லாய்வறிஞர் அருளி குறிப்பிடுவதைப் போல "கச்சிதமும் சொற் சுருக்கமும், பொருள் விளக்கமும் உடைமை, இயற்கையின் பேரொழுங்கைப் போன்றதாகும். உலகியலில் உள்ளடக்கவேண்டிய அத்துணைப் பகுதிகளையும் ஒன்று விடாது அமைத்திருக்கும் நிறைவு நிலை, நூலுக்குரிய முழுமைப் பண்பை வெளிப்படுத்துவதாக உள்ளது"[5]

நாலடியாரினும் பதினெட்டு நூற்றுண்டுகட்குப் பின்னர் தோன்றிய உலகியல் நூறு மொழி நடையிலும் கருத்துச் செறிவிலும் ஒரே காலப் பின்னணியை உணர்த்துவது போலத் தோன்றுகிறது.

உலகியல், நாட்டியல், மாந்தவியல், பொறுமையியல், வாழ்வியல், குடும்பவியல், ஆண்மையியல், பெண்மையியல், உறவியல், அயலியல், வினையியல், செல்வயியல், ஒப்புரவியல், அறிவியல், புகழியல், இறப்பியல், பிறப்பியல், உயிரியல், ஓர்பியல், இறைமையியல் என்னும் இருபது இயல்களின் வைப்பு முறை வாயிலாக 'உலகியல் நூறு' வடித்த ஆசிரியர் தம் ஆழ்ந்த படைப்பிலக்கியத் திறனை யாவரும் அறியலாம்.

மக்கள் வாழ்வில் நேரும் அறிவுத் தடுமாற்றத்தை உணர்த்த வந்த உலகியல் நூறு,

"உண்மை இலவென்பார் இனிமை உளவென்பார்
அண்மை தொலைவென்பார் ஆம்"[6]

என்றவாறு உலகோரின் மயக்குற்ற நிலையைத் தெள்ளத்தின் விளக்குகிறது. நாலடியாரும், "அறஞ் செய்தவை மறந்து செல்

வத்தை விரும்பி இறப்பைக் கருதாத இழி தன்மை மிகுந்த மனத் தினரைச்''[7] சாடுகிறது.

"தெளிவிலார் நட்பிற் பகை நன்று", (பா-219) என்று நாலடியாரும், "நட்பரிது நட்டல் நனிவலிது நட்டாலும் திட்பமுறலரிது" (பா-43) என்று உலகியல் நூறும், நட்பு நிலையைச் சுட்டுகிறது. "அழன்மண்டு போழ்தின் அடைந்தவர்கட் கெல்லாம் நிழன் மரம் போல் நேரொப்பத் தாங்கி" (பா-202) என்று நாலடியாரும், "தாமுறுவ துற்றம் தமையுறுவ தொண்சுற்றம் ஏமம் இவையென்ப" (பா-42) என்று உலகியல் நூறும் சுற்றந்தழால் குறித்து விளக்கியுரைப்பது இவ் விரு நூல்களுக்கிடையேயுள்ள கருத்தொற்றுமையைத் துலக்கிக் காட்டுவனவாகும்.

"இரு இலக்கியங்களை ஒப்பிடும்பொழுது அவற்றின் பொதுப் பண்புகள் யாவை, சிறப்புப் பண்புகள் யாவை என்பது தெளிவாகிறது. இத் தெளிவு வரலாற்றடிப்படையினரின் இலக்கிய ஆராய்ச்சிக்கு ஏதுவாக அமைகிறது''[8] என்ற அறிஞர் கைலாசபதி கருத்துக்கேற்ப வாழ்வின் அறங்களை வலியுறுத்துவதேயாம் என்பது தெளிவு. நாலடியார் சமணரால் எழுதியதாகலின் துறவறத்தை முதல் ஏழு அதிகாரங்களிலும் கூறியிருப்பது அதன் சிறப்புப் பண்பென்றும், மாந்த மனத்தின் துயர் மூட்டங்களைக் களைந்து, மாசு மயக்கங்களைப் போக்கி, அறிவைச் சூழ்ந்து வகுத்தும் இழிவு இருள் நிலைகளை விலக்குவதும், இவற்றை முறைப்பட விளக்குவதுமே உலகியல் நூறின் சிறப்புப் பண்பென்றும் அளவிட்டுரைப்பது சாலப் பொருத்தமாகும்.

'ஈதல் இசையாதெனினும் இரவாமையீதல் இரட்டியுறும்' (பா-95) 'நடுவணதெய்த விருதலையுமெய்தும்' (பா-114) 'கல்வி யழகே யழகு' (பா-131) 'சீர் பெறுவர் குன்றனூர் கேண்மை கொளின்' (பா-176) 'எறிந்தவேல் மெய்யதா வால்குழைக்கும் நாய்' (பா-213) 'ஒருவர் பொறை இருவர் நட்பு' (பா-223) 'வற்றிய ஓலை கலகலக்கும்' (பா-256) 'கானந்தலைப்பட்ட தீப்போற் கனலுமே மானமுடையார் மனம்' (பா-291) போன்ற நாலடியாரின் தொடர்கள் வாழ்வியற் சித்தனைகளை வகுத்துரைக்கும் உரமும், திறமும் சான்ற மெய்ம்மக் கூறுகளாகும்.

'ஆனைக் குழுசெய் யறநெறிஆங் கோர்ஏழைப் பூனைக்கு உதவும் எனல் பொய்' (பா-7) என்று சட்ட நிலைகளைச் சாடுவதும் 'வான்தோய் வளமனைக்குள் வன்குடில்வாழ் ஏழையர்தம் கான் தோயுங் காலம் வரும்' (பா-18) என்று பொதுமையைப் போற்றிப் புரட்சியை வரவேற்பதும், 'மனவுயர்ச்சி தாழவரல் மானம் அது தான் இனவுயர்ச்சி காட்டும் எழுச்சி' (பா-74) என்று மானத்தை வரையறுத்துக் காட்டுவதும், 'நன்மை நினைக்குணர்வே நன்றி'

(பா-67) என்று நன்றியுணர்வை நயந்து போற்றுவதும் உலகியல் நூறு உணர்த்தும் செவ்விய அறநிலைக் கோட்பாடுகள் ஆகும்.

நாடு, மொழி, இனம் கடந்த நிலையில் உலக மாந்தர் அனை வருக்கும் பொதுவானதாகப் படைக்கப் பெறுவதே சிறந்த அறி விலக்கியம். தம் உணர்வுகளையும், கொள்கைகளையும் வலிந்து திணிக்காது, "பொது நலவுணர்வும், தொண்டுள்ளமும், அருள் நெஞ்சமும், மக்கட் பற்றும், அறத்தெளிவும், ஒழுங்கு வேண்டும் வேட்கையும், உலகியல் தெளிவும், பரந்த நூலறிவும் வாய்ந்த ஒரு நன்னெஞ்சமே இத்தகைய நூல்களை யாக்கவல்லது! அக் கூறு களின் திரட்சியாய் விளங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் இவ் வுலகியல் நூறைச் சிறக்க வைத்துள்ளார்.[9] என்ற அறிஞர் அருளி யின் ஆராய்ச்சி முன்னுரை நூலின் மாட்சியை நுண்ணிதின் உரைக் கும் பொருள் பொதிந்த மதிப்பீடாகும்.

"காலக் கோட்பாடும், நாட்டெல்லையும் மொழித்தடையும் கடந்து இலக்கியம் ஒருமையுடையதாய்க் காட்சியளிப்பதற்கு மாந்த இன ஒருமைப்பாடே காரணமாகும். மாந்த இனப் பண் பொற்றுமைதான் (Essential unity of mankind) உலக இலக்கி யங்களிடையே காணப்படும் பொதுத் தன்மைக்கு அடித்தள மாகும்.[10] என்ற அறிஞர் தமிழண்ணல் கூற்று காலச் சூழலால் வேறுபட்ட நாலடியாரையும் உலகியல் நூறையும் ஒப்பு நோக்கிப் பார்த்துச் சில உண்மைகளை வெளிப்படுத்தத் தூண்டுகிறது.

எக்காலத்துக்கும், எவருக்கும் பயன்படும் வண்ணம் திருக் குறளைப் போலவே அரிய கருத்துகளைத் தன்னகத்தே கொண்டு நாலடியார் சிறந்து விளங்குகிறது. உலகியல் நூறும் சேற்று நிலத்தில் ஊன்றுகோலாய், தவறான தீயொழுக்கங்களிலிருந்து நம்மைத் தடுக்கவல்ல அரிய மருந்தாக அறிவியல் நோக்கில் எழுந்த முழுமை இலக்கியமாய் வழிகாட்டுகிறது.

புத்தம் புது உவமைகளை எடுத்தாள்வதிலும், உலகுணர்ந்த தொடர்களால் கருத்து விளக்கம் அளிப்பதிலும், உள்ளடக்கத் திலும், யாப்பிலும் நாலடியாரும் உலகியல் நூறும் ஒத்திருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது, பாவலர்களின் உள்ளுணர்வும் சிந்தனைப் போக்கும் உலகியலை உணர்த்துவதும் நன்னெறிப் படுத்துவதுமாகிய இலக்குகளில் ஒன்றியிருப்பது இவ்விரு விலக் கியங்களின் ஒப்பீடு வழி நாம் அறியலாகும் செய்தியாகும்.

அடிக் குறிப்புகள்

1. நன்னூல் - நூற்பா - 10. [பக்-11
2. நாலடியார் மூலமும், இராசகோபால் பிள்ளை உரையும்

ஓராசிரியமாய் ஒளிதுலங் குகவே!

பாவலர்- முல்லைவாணன்

[மலேசியப் பாவலர், ''உதிரிப்பூக்கள்'' நூலாசிரியர், தென் மொழித் தம்பி பொன் அன்பரசன் மறைவு குறித்த இரங் கற்பா இது.]

இந்திய மென்னும் மந்திவாய்ப் பட்டு
முந்தைப் பெருமையை முற்றும் இழந்து
சாதி விலங்கும் சழக்குறு வாழ்வும்
தீதுறை கலையும் தெளிவிலா அரசும்
கொண்டநம் மக்கள் - குலைவிலா வாழ்வு
கண்டிட "தமிழக விடுதலை"க் காக
முந்தித் தருமோ ருயிரென வாழ்ந்த
செந்தமிழ் அன்பர சன்எனும் தென்மொழித்
தம்பி- உந்து நேர்ச்சியால் மறைந்தது
எம்முயிர் வாழ்வே இற்றது போலாம்!

கனிந்த அன்பும் கரவிலா நெஞ்சும்
குனிந்த கொள்கையைக் கூறிடும் தமிழும்
பாவேந் தர்தமைப் பயின்றநற் றெளிவும்
பாவா ணர்படை முன்னெடுந் துணிவும்
'தென்மொழி' எனிலோ தேனடை யாகி
முன்னடை கொள்ளும் முப்பிலா வாழ்வும்

---

3. நாலடியார், அதிகாரம் 3-பாடல் 25.
4. பெருஞ்சித்திரனார் (1982) உலகியல் நூறு-பாடல் 76.
5. உலகியல் நூறு:ஆராய்ச்சி முன்னுரை-பக். 18.
6. பெருஞ்சித்திரனார் (1982) உலகியல் நூறு-பாடல் 3.
7. நாலடியார், 32 ஆம் பாடல் கருத்து.
8. கைலாசபதி (1969) ஒப்பியல் இலக்கியம்-பக். 51.
9. உலகியல் நூறு, ஆராய்ச்சி முன்னுரை-பக். 42.
10. தமிழண்ணல் (1977) ஒப்பிலக்கிய அறிமுகம்-பக். 12.

[1986 சூன் 13, 14 ஆகிய நாள்களில் ஈரோட்டில் நடை பெற்ற இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன் றப் பதினெட்டாவது கருத்தரங்கை யொட்டி வெளி யிடப்பெற்ற ஆய்வுக்கோவை முதற்றொகுதியில் இடம் பெற்றுள்ள கட்டுரை.]

கொண்டவன் நம்மைப் பிரிந்த கொடுமையும்
தண்டனை என்பதா, தமிழ்நிலத் தாழ்ச்சியா ?

அயலகந் தன்னில் மயல்நிறை இந்திப்
புயலெதிர்த் துண்ணு நோன்பினைச் செய்தவன் !
"பாவேந் தர்பின் நானே என்றுர்
மாவேந் தாயினென்?" எனக்கால் கழற்றியோன் !
பல்கலைக் கழகப் பாழாம் ஆய்வினைச்
சொல்நிலைச் சுடரால் சுட்டுப் பொசுக்கியோன் !
ஆருயிர் உளவரை "ஐயை ஐயை"யென்று
ஆர்த்திட - என்தலை மகட்குச் சூட்டியோன்!

பொய்யாத் தமிழைப் புரந்தான் இல்லம்
ஐயை புகுமுனம் அருந்தமிழ் துறந்ததேன்!

செந்தமிழ்ப் பாவையும் என்இன மக்களும்
வெந்தழல் துன்புற விரைந்ததேன் வானம் ?

பாவல ரேற்றின் பணிநிலை சூழ்ந்த
ஆவலாய் ஓடிய ஆற்றல் மறைந்ததே !

பாவல ரேற்றின் கண்கள் பனித்திட
நாவலர் வழியில் நடந்தவன் பிரிந்தது
தமிழ்க்கும் இனநாட் டுயர்வுக் கும்நலம்
சிமிழ்க்கும் உயிரும் சிதைந்ததே ஆகும் !

நின்னரும் பிரிவால் நிலைகுலைந் திட்டோம்!
நின்னுளம் விரும்பிய தமிழ்நிலம் மீட்போம் !
தென்மொழித் தம்பியே, தீதிலா வாழ்வே !
நின்புகழ் என்றும் நிலைபெறச் செய்யும்
நூரு சிரியம் தம்முள்
ஓரா சிரியமாய் ஒளிதுலங் குகவே !

தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின்
கொள்கைகள் அடங்கிய கிழமை இதழ்.

1.	தனியிதழ்	விலை	உரு.	00-65
2.	ஆண்டுக் கட்டணம்	,,	,,	36-00
3.	அரையாண்டுக் கட்டணம்	,,	,,	18-00

தொடர்புக்கு: தமிழ்நிலம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

பறையும் கயவரும்!

-புலவர் மலையமான், க.மு.

தமிழகத்தில் இசைக் கருவிகள் பல உண்டு. அவற்றுள் ஒன்று பறை. இந்தப் பறை இன்னும் வழக்கில் உள்ளது. இது திருவள்ளுவர் காலத்தில் இருந்தது. இப்பறையைப் போன்றவர்கள் கயவர்கள் என்று கூறினார் திருவள்ளுவனார். அவர் அதற்குக் காரணத்தையும் அறிவிக்கிறார். தாங்கள் கேட்ட மறைவுச் செய்தியை (இரகசியத்தை)த் தாங்கிச் சென்று பிறரிடம் அறிவித்தலால், கயவர்கள் அடிக்கப்படும் பறைக்குச் சமமானவர்கள் என்று அவர் கூறுகிறார்.

''அறைபறை அன்னர் கயவர்தாம்'' கேட்ட
மறைபிறர்க்கு உய்த்து உரைக்க லான் (கு.1076)

என்பது அவரது வாய்மொழி. இக் குறளை ஆழ்ந்து கவனித்தால்-தான் இதன் உவமைச் சிறப்பு புலப்படும்.

இசைக் கருவிகள் நெஞ்சத்தில் இன்பத்தைச் சேர்க்கத் துணைசெய்கின்றன. அக் கருவிகளில் சிறந்தவற்றிற்குஇனிமையைக் குறிக்கின்ற சிறப்பு எழுத்தான ''ழ'' கரம் தரப்பட்டிருக்கிறது. (எ-டு) யாழ், முழவு, குழல்) (தம் மக்களின் மழலைச் சொல் கேளாதவரே யாழ் இனிது, என்றுரைப்பர் எனும், கருத்தும் (குறள் 66) இங்கு நினைவு கூரத்தக்கது) ஏனைய இசைக்கருவிச் சொற்களில் மெல்லின, இடையின எழுத்துகளே மிகுதியாக அமைந்துள்ளன. (எ-டு) தண்ணுமை, முரசு, எல்லரி, பெருவங்கியம், வயிர் முதலியன) ஆனால், இந்தப் பறை என்னும் இசைக் கருவிப் பெயரில் வல்லின எழுத்துகளே காணப்படுகின்றன. அதனால் இச் சொல்லைக் கேட்கும் போது, நம்மை யறியாமலே-தன்னியல்பாக- நம் நெஞ்சத்தில் வெறுப்புணர்ச்சி தோன்றுவதை ஊன்றிக் கவனித்தால் உணரலாம். இத்தகைய வெறுப்புணர்ச்சி ''கயவர்'' என்ற சொல்லைக் கேட்கின்ற இலக்கிய நெஞ்சினருக்கு உடனே ஏற்படும்.

பறையின் குணம்

1. குழல் தண்ணுமை போன்ற இசைக் கருவிகள் இணைந்து இன்னியமாக ஒலிக்கும். ஒருவர் பாட, அவர் குரலுக்கு இனிமை சேர்க்கும் முறையில் அவை செயல்படும். ஆனால் பறை எப்போதும் பிறஇசைக் கருவிகளுடன் சேராமல் தனித்தே ஒலிக்கும். அது பாடுவோர் குரலோடு இணைந்து செயல்படாது.

கயவரின் குணம்

1. கயவர்களும், குழுகாயத்தில் தனியாகச் சுட்டப்படும்நிலையில்தான் நடந்தகொள்வார்கள். அவர்கள் நல்லவர்களுடன் இணைந்து வாழ மாட்டார்கள்.

2. பறை என்பது பொதுவாக மங்கலமல்லாத கருவியாக அமைந்துள்ளது. சிற்றூர்களில், இறந்தவர் வீட்டின் எதிரிலும இறப்பு ஊர்வலத்தின் போதும் இன்றும் அது ஒலிக்கப்படுகிறது.

2. கயவர்களும்குமுகாயத்தின் அமங்கலங்கப்பொருள்களே! அவர்கள்,பிறரின்துயரங்கள் துன்பங்கள், இன்னல்கள், இழப்புகள் ஆகியவற்றை மற்றவர்களுக்கு அறிவிப்பதில் முன்னணியில் இருப்பவர்கள்; அதனால் அவர்கள் பெருமகிழ்ச்சி கொள்வார்கள்.

3. பறை, விளம்பர நிலைக்குப் பேருதவியாக இருக்கிறது, அண்மைக் காலம் வரை, சிற்றூர்ப் புறங்களில், பறையை அடித்துத்தான் அனைவருக்கும் செய்தி அறிவிக்கப்பட்டது. சில சமயங்களில் ஒருவன் பறையை அடித்துச்செல்ல அவன் பின்னால் வருபவன்விளம்பரத் தாள்களை மக்களிடம் வழங்கிய பழக்கமும் நிலவியதுண்டு.

3. கயவனும் வேறொருவரின் செய்தியை விளம்பரப் படுத்துவதில் முதலிடம் பெறுபவனாக இருப்பான். அதுவே அவனுக்குத் தலைச் சிறந்த கடமையாக அமையும்.

4. வீட்டினுள் இருப்பவரின் கவனத்தை ஈர்த்து, அவர்களின் வேலையைக் கெடுத்து அவர்களை வெளியே வரவழைத்து அவர்களிடம் ஒரு செய்தியைச் சேர்ப்பது பறையின் பணியாகும்.

4. கயவரும் பிறரின் எண்ணங்களை ஈர்த்து, அவர்களின் கடமைகளைத் தடை செய்து, அவர்களை நன்னிலைக்கு அப்பால் வரச் செய்து, அவர்களிடம் ஒரு செய்தியைச் சேர்ப்பார்கள்.

5. மற்ற இசைக்கருவிகள் பெரும்பாலும் அரங்குகளில்-தாம் ஒலிக்கும். பறைக்கு அரங்கத்தில்இடம்தருவதில்லை, அது தெருவில்தான் ஒலி எழுப்பும்.

5. கயவர்களும், அறிஞர் அவையில் இடம் பெறமாட்டாமல் தெருவில் திரிபவர்களாகவே இருப்பார்கள்.

6. கீழ்மக்களுக்குரியபொருளாகவே பறை பயன்பட்டு வருகிறது. பறையைப் பயில்

6. கயவர்களாகிய கீழ்மக்கள் மட்டுமே கயமையைச்சூழ் நிலையால் கற்றும் இயல்பா

வோரும், பயன்படுத்துவோரும், தாழ்ந்தவராகவே உள்ளனர்.

கவே பெற்றும் பயன்படுத்தி வருகின்றனர்.

7. குழல், முழவு முதலிய இசைக் கருவிகளிலிருந்து பிறக்கும் இசை நெஞ்சில் கலக்கிறது. நெடுநேரம் நிலைக்கிறது. மீண்டும் மீண்டும் நினைத்துச் சுவைத்துப் பார்க்கும்படி தூண்டுகிறது. பறையோசை காதில் படுகிறது. ஆனால் அது மனத்தில் படிவதில்லை. திரும்ப நினைத்து மகிழும்படி அஃது அமைவதில்லை.

7. கயவர்களின் சொற்களும், நல்லவர் காதில் படுமே தவிர, அவர் தம் உள்ளத்தில் ஊன்றுவதில்லை. அடிக்கடி நினைத்துப் பார்த்து அகத்தே மகிழும் நிலையை அவை பெறுவதுமில்லை.

8. பறையின் மேற்புறமும், முழவின் பக்கமும் ஒன்றாகவே தோன்றுகின்றன. அவை ஒரே பொருளால் உருவானவை. ஆனால், அவற்றின் செயல் விளைவுகள் வேறாகத் தோன்றுகின்றன.

8. கயவரின் நாக்கும் நல் அறிஞரின் நாக்கும் உருவ அமைப்பில் ஒத்திருப்பினும், அவற்றால் ஏற்படும் பின்விளைவுகள் முற்றிலும் மாறுபடுகின்றன.

9. பறையைக் கோல் நெருங்காத வரை ஒலி எழுவதில்லை. அப்போது பறை அமைதியாக இருக்கிறது.

9. மறைச்செய்தி கிடைக்காத வரை கயவர்களும் அமைதியாகவே இருப்பார்கள். ஆனால், அச்செய்தி கிடைத்தவுடன், அதைப் பிறருக்கு அறிவிப்பதில் முனைப்பாகச் செயல்படுவார்கள்.

எனவே 'அறை பறை அன்னர் கயவர்' என்று உரைத்தார் ஒப்பிலாப் பாவலர் திருவள்ளுவர். அதன் வழி பறை என்ற இசைக் கருவியைக் கயவருக்கு உவமை கூறிப் புதுமையைப் படைத்திருக்கிறார், அவர்.

-நன்றி: 'வள்ளுவர் வழி' சூன்-சூலை 86

அன்பர்கள் கவனிக்க !

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் காரி-ஞாயிறு ஆகிய நாள்களில், மாலை 5 மணிக்குமேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

-அமைச்சர்,

அன்பரசன் இரங்கற்பா !

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் மலேசியச் சுற்றுச் செலவு மேற்கொண்டிருந்த பொழுது, ஐயா அவர்களைக் காண்ப தற்காக மலேசியத் தென் பகுதியில் உள்ள சோகூர்பாரு எனும் இடத்திலிருந்து வருகையில் மகிழுந்து மோதலினால் உயிர்நீத்தார். பாவலர் திரு. அன்பரசன், நெடுநாளைய தென்மொழி அன்பரும், தமிழின விடிவில் பேரார்வமும், ஆசிரியர் மீது பேரன்பும் கொண்ட பாவலர் அவர்கள் நூல் ஆசிரியரும் ஆவார். அன்னவர் மறைவின் பொழுது பாவலரேறு அவர்கள் எழுதிய இறங்கற் பா இது.

உள்ளம் வெதும்பியது - என்
உயிரும கருகியது - கண்
வெள்ளம் பெருகியது - இரு
விழியும் சுருங்கியது - கருங்
கூந்தல் அவிழ்ந்தழும்
ஏந்திழையைப் பார்த்துக்
குமுறிற்றடா தமிழ் நெஞ்சம் - உயிர்
கோரிற்றடா ஒரு தஞ்சம்! (உள்ளம்)

அன்னை துடித்தனளே - நீர்
ஆறாய் வடித்தனளே ! துயர்
மின்னல் பலகோடி - இடி
மேலிடப் பாய்ந்ததுவே ! - ஏழு
சின்னக் குழந்தைகள்
கனனத்தில கைவைத்துத்
தேம்பி யழுதனர் சுற்றி - உயிர்
தேய்ந்ததடா உடல் வற்றி (உள்ளம்)

அன்புக் கரசனவன் ! - தமிழ்
ஆக்கத்தின் வீரனவன் ! - என்
என்பில் தசையினிலே - மூச்
சேற்ற இறக்கத்திலே - உயிர்
தென்பு குறைந்தது;
தீயில் எரிந்தது -
தேறினனே கோடிப் பேரில் - அவன்
சென்றனனே வானத் தேரில் (உள்ளம்)

ஒரு நடுநிலை மடல்:

தென்மொழிப் பணிக்கு இடையூறு விளைவிக்க வேண்டா?

பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு வணக்கம்.

ஆற்றுவாரின்றி அழுது புலம்பும் தமிழன் குரலைக் கேட்பவர் யார்? போற்றுவார் 'தமிழினத் தலைவரென'. ஏற்றுவார் அவர்தம் புகழை விண்முட்ட. என்றேனும் எண்ணிப் பார்த்ததுண்டா ஒற்றுமையின் தேவையை!

ஈழத் தமிழர் நிலை கண்டு கொதிக்கும் நெஞ்சம் அந்த 'மூவர்க்கு' மட்டுந்தாம் உள்ளதா? வேறு எவர்க்கும் இல்லையா? அவர்களையும் இணைத்துக் கொள்ளாதது ஏன்? ஒற்றுமையன்றோ உண்மையான வலிமை. ஒன்றுபட்டு நன்று செய்யும் காலம் என்று வருமோ!

உ. த. மு. க. தொடக்க மாநாட்டு விளம்பரத்தைத் தமது தாளிகையில் வெளியிடாமல் திருப்பி அனுப்பியதேன்? அவ்வியக்கம் வளர்ச்சி பெற்றால், தமது இயக்க வளர்ச்சி குன்றும் என்ற அச்சமா? உண்மையான தமிழின நலன் நாடுவோரின் பெயர் மக்களுக்குத் தெரிந்துவிட்டால், அவருக்கு ஆதரவு பெருகித் தாம் 'தமிழினத் தலைவரென' உலா வர முடியாது எனும் பரந்த மனப்பாண்மையா?

தமிழினம் சாதி-சமய வேறுபாடு ஒழிந்து, கட்சி வேறுபாடு பாராமல் இவரைத் 'தமிழினத் தலைவரென, ஏற்றுக்கொண்டதா? கட்சித் தலைவரெனத் தனக்குத் தானே முடிசூட்டிக்கொண்டாரன்றோ!

இந் நாட்டில் தமிழினத் தலைவர் ஆகும் தகுதி படைத்தவர் எவரும் இருக்கின்றாரா? இருந்தாலும், குடத்திலிட்ட விளக்கெனவே இருப்பர். அன்னார் குன்றிலிட்ட விளக்கென ஒளி வீசும் நாள் என்றோ?

தமிழகத்திலுள்ள நூலகங்களில் இடம் பெற்ற 'தென்மொழி' எவருடைய ஆட்சியில் உள்ளே வரவிடாமல் தடுக்கப்பட்டது? இதுதான் தமிழ்மொழி வளர்ச்சிக்குச் செய்யும் மாபெரும் பணியோ?

1968 ஆம் ஆண்டுக்குப் பின், அமைச்சர்கள் கையூட்டுப் பெறும் புதுமையான 'வரலாற்றுச் சிறப்பு மிக்க பெருமையினை' உருவாக்கியது எவருடைய ஆட்சி? இன்றும் அது தொடர்கதையாகத்தானே உளது!

போராட்டம் என்பது எழுச்சியை எடுத்துக் காட்டும் கோரிக்கையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரும் நடை

முறை. மக்கள் ஆட்சியில் ஏற்றுக்கொண்ட செயல்பாடு. இதனைத் தாம் ஆட்சியில் இருக்கும்போது எவ்வாறு அணுகினர்? இரும்புக் கைகொண்டு ஒடுக்குவோம் என்று கூறவில்லையா? ஒப்புரவுக் கொள்கையாளர் செய்யும் செயலா இது?

பதவி நலம் பெறுவதற்காகத் திராவிட நாட்டுக் கொள்கையைக் கை நெகிழவிட்ட பின் ஏற்றுக்கொண்ட 'மாநில சுயாட்சிக் கொள்கையை வென்றெடுக்க நடத்திய போராட்டங்கள் எத்தனை? சிறை சென்றவர்கள் எத்தனை ஆயிரம் பேர்? இதன் விளைவாகத் தமிழ்நாடு கூடுதலாகப் பெற்ற அதிகாரங்கள் எத்தனை? ஏன் மூக்கத்துணையளவாவது இந்தித் திணிப்பு ஒழிந்ததா?

இன்றைய அரசியல் கட்சிக்காரர்களின் மொழிப்பற்றும் இனப்பற்றும் மெய்யானதல்ல. அரசியல் ஊதியம் பெறவே அவ்வாறு பேசுகின்றார்கள். அதுபோலத்தான் பகுத்தறிவும்.

பெரியார் மாவட்டம் அமைத்து விட்டுச் சங்கராச்சாரியிடம் சென்று வாழ்த்துப்(ஆசி) பெறுவார்கள். மூகாம்பிகை கோயிலுக்குப் போய்விட்டு வந்து, பெரியார் நூற்றாண்டு விழாக் கொண்டாடுவார்கள்.

இத்தகைய சூழ்நிலையாளர்களை மக்கள் அடையாளங் கண்டு கொள்ளத் தடையாக இருந்து, திரை போட்டு மறைப்பது அறியாமைதான். அறியாமைக்குக் காரணம் பொருளியல் தாழ்நிலைதான்.

மீனவ நண்பனாக நடிப்பவர்களெல்லாம், மீனவர்களின் நண்பனாகிவிட முடியாது. நடிப்பு உண்மையாகாது. நடிப்பைக் கண்டு ஏமாறிய மக்கள் பொதுவுடைமைக் கருத்துள்ள பாடல்களுக்கு வாயசைத்தவர், பொதுவுடைமைக் கொள்கையாளர் என்று எண்ணி ஏமாறிய மக்கள் அதற்குரிய பயனைப் பெறுகிறார்கள்.

மீனவ மக்களின் வாழ்க்கையைச் சீர்குலைத்துச் சென்னைக் கடற்கரையை அழகுபடுத்துவது எவருக்காக? பணக்காரர்களுக்காக!

ஏழை மக்களால் வளர்ந்த இயக்கம், இன்று அம்மக்களை விட்டு வெகு தொலைவில் சென்றுவிட்டது. அப் பாசறையில் நச்சுப் பாம்புகளும், நயவஞ்சக நரிகளும் புகுந்து நாயகம் செய்து கொண்டு இருக்கின்றன.

சென்ற 22 ஆண்டுகளாகத் தனித்தமிழில் இதழ்களை நடத்தி வரும், இனித் தமிழ் என்றால் தனித்தமிழே என்று நிலைநாட்டி வரும், எங்கள் அருமைப் பேரறிஞர் பெருஞ்சித்திரனார் மதுரையில் நடைபெற்ற 'உலகத் தமிழ் மாநாட்டில்' கலந்துகொள்ள அழைப்பு விடுத்துப் பின்னர் அழைப்பு மறுக்கப்பட்டது ஏன்? அவருக்கு என்ன குறை? தகுதி இல்லையா? அவருக்கே தகுதி இல்லையென்றால்...?

ஏ! தாழ்ந்த தமிழகமே! என்றைக்கு உண்மையான தமிழுணர்வாளர்களை அடையாளங் கண்டு, அவர் பின்னே நடையிடத் தொடங்குவாயோ அன்றே, நீ தலைநிமிரும் நிலை பெறுவாய்.

இவ்விரு இயக்கங்களால் மக்களின் நிலை இம்மியளவும் உயரப் போவதில்லை. தனி மாந்த வழிபாட்டுக்கு முகாமை அளிக்கின்றனர்.

ஆசிரியர் இயக்க ஒற்றுமையைச் சீர்குலைத்து, இயக்கத்தை உடைத்தவர்கள். இவர்களுக்குப் பின்னாலே கண்மூடித் தனமாக ஆதரிக்கும் ஒரு கூட்டம் உளது.

'இயக்கமே தாங்கள்; தாங்களே இயக்கம்' என்று மாயையை உருவாக்கியுள்ளனர்.

தாங்கள் இல்லாவிடில் இயக்கமே இல்லை என்ற நம்பிக்கையை ஊட்டியுள்ளார்.

இனி, இவர்களுக்காக வரிந்து கட்டிக்கொண்டு, வழக்காடுவோருக்குக் 'கருத்து மேடை'யாகத் 'தென்மொழி' அமைவதைத் தென்மொழி அன்பர்கள் விரும்பவில்லை. இதனைத் தென்மொழிக்குத் தெரிவிக்கின்ற தென்மொழி அன்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, கருத்து மோதல் இத்துடன் நிற்கட்டும். தென்மொழியின் நற்பணிக்கு இடையூறு விளைவிக்க வேண்டா! தென்மொழி தமிழர்க்குக் கிடைத்த பெரும்பேறு! அதனைக் கைநெகிழ விட வேண்டா! நன்றி! அன்புள்ள,

—செந்தமிழ்வாணன், பாலகிருட்டிணபுரம், கீரனூர்.

குறைமாதக் குழந்தை!

தரங்கை-பன்னீர்ச் செல்வன்

(தனிச்சீர் சமநிலைச் சிந்து)

குறைமாதக் குழந்தையடா, புதுக்கல்வித் திட்டம் - அற்றைக்
குலக்கல்விப் புரட்டிலும் இதுமிகவும் மட்டம்;
முறையாக ஒருசிலரை முன்னேற்றும் நோக்கு - தமிழர்
முதுகேறிப் பரியோச்சும் புதுக்கல்விப் போக்கு!

ஒருகாலும் பின்னுள்ளோர் உயர்ச்சியுற மாட்டார் - இந்தி
ஓரவஞ்சர் பிறரெவர்க்கும் ஒல்லுவழி காட்டார்;
இருநாவர் - ஏழையரின் வறுமையிருள் ஓட்டார் - தமிழர்
இவ்வுண்மை உணராரேல் இழிமயிரும் ஈட்டார்! 2

அதிகாரப் புதுக்குலத்தை ஆக்குமிந்தக் கல்வி - எல்லாம்
அவனாலே என்போரை ஊக்குமிந்தக் கல்வி;

[தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க]

1. 'எரிமலை'ப் பாடல்களும், 'சாம்பல்' மேடுகளும் பற்றி ...!

தோழர்களே,

'பாரதி செந்தேனீ', 'இக்பால் செந்தீ' என்று பாராட்டிய வரலாறு, இன்று வளர்ந்து மாறிவரும் வரலாறு பற்றியெல்லாம் படிக்கிறோம். நமக்கு இன்று தேவை என்ன? கம்பனையும், வால்மீகியையும் வைத்து மாவு பிசையும் வேலையும், 'பாரதி'யை, 'இக்பாலை 'பாராட்டும் வேலையும் ஏன்? ஒருவேளை இந்த அமைப்பு தீவிரப்படுத்தப்படுவது ஏன்? அதுவும் தேசிய இன ஒடுக்கு முறை'யை மேற்கொண்டுள்ள அறிவாளித்தனங்களின்' ஆரிப் பாட்ட உரைகளை ' நாம் கண்டும்-காணாமல் இருப்பதும், அல்ல, அந்த உரைகளோடு நாமும் 'கரைந்து' போய் விடுவதும் பற்றி நாம் எண்ணித் தீரவேண்டியவர்களாக உள்ளோம் !

பாரதியை 'ஆவேசப் பாவலன்' என்று சுட்டிக்காட்டிய பெருஞ்சித்திரனார், அவன் 'ஆவேசம்' தீர்ந்ததும், 'பழைய குருடி கதையாகி விடுகிறான் என்பதையும் தெளிவுபடுத்தியது நினைவுக்கு வருகிறது;

இங்கே 'பாரதி' போக, ஏன்—அவனையும் விட எரிகுழம்பைப் பாட்டாக வாரி வீசிய இக்பாலைப் பற்றியும் எண்ணமிட வேண்டியவர்களாக உள்ளனர். 'பாரதி', 'இக்பாலை' எல்லாம் இப்போது தூக்கிப் பிடிப்பவர்கள்-முன்பு தூக்கி எறிந்தவர்கள் பற்றி நாம் ஆராயவேண்டும்.

இந்தி(ய) ஒருமைப்பாட்டை-பழைய பல்லவியை இவர்கள் புதுப்பிக்கப் படாத பாடெல்லாம் படுகின்றார்கள். அதற்காக

(முன் பக்கத் தொடர்ச்சி)

குதிகாலில் முள்ளாகும் எளியர்க்குக் கல்வி - தமிழர்
குடித்தாடிச் சீரழிய வழிவகுக்குங் கல்வி ! 3

தாய்மொழியிற் பயில்வோரைத் தடுக்குமிந்தக் கல்வி — வறியர்
தலைநிமிர்த்த வழியின்றிக் கெடுக்குமிந்தக் கல்வி ;
வாய்மைக்கு மாறானோர் தாலாட்டுக் கல்வி - தமிழர்
வரலாற்றை அறியாதோர் வாளாட்டுங் கல்வி ! 4

உடையெதற்கோ, சோறெதற்கோ, உயர்கல்வி இன்றி - உடலால்
உழைப்பாளர் மேன்மேலும் ஒடுங்குதற்கோ, குன்றி ?
முடையதற்கு வந்ததனால் முகிழ்த்ததிந்த வழக்கு - தமிழர்
முட்டாள்கள் அல்லரென முரசறைந்து முழக்கு ! 5

காசறையில் மணமென்பார் தொழில்சாயக் கல்வி - அந்தக்
கருங்காலிக் கூட்டத்தைக் கறையெடுத்துக் கொல்லி ;
பாசறையின் உரிமைப்போர் பாளையத்தைக் கூட்டு - தமிழர்
பண்பாட்டைக் கூறையிடும் படையெடுப்பை ஓட்டு ! 6

அன்று போர்க்களத்தில் - வரலாற்றுக் கடமை புரிந்தவர்களை இன்று 'ஒருமைப் பாட்டு'க்கு நின்ற மேலவர்கள் என்று நிறுவத் துடிக்கிறார்கள்.

விடுதலை - அடிமை எதிர்ப்பு, புரட்சி எல்லாம் இன்று இந்த ஒருமைப் பாட்டுக்காரர்'களுக்கு ஆகாத புலனம் (சங்கதி)களாகி 'விட்டன.

இன்று தமிழர்களும், பிற தேசிய இனங்களும் 'எழுச்சிப்பண்' பாடினால் எரிச்சல் அடைபவர்களுக்கு 'ஒருமை' பற்றிப் பேசும் தகுதி எங்கிருந்து வந்துவிடும் ?

'இக்பால்'பற்றி எழுதும்போது, 'இக்பாலும், தேசிய ஒருமைப் பாடும்' என்றுதான் எழுதத் தோன்றுகிறது அவர்களுக்கு. சண்டிகார் இலக்கியக் கழகம், எக, எம், எச். புருனே எழுதிய நூலை வெளியிட்டுள்ளது. இது மேற்படி தலைப்பில் 'இக்பால்' வரலாற்றை விரிவாக எழுதுகிறது. 'பாக்கித்தான் பிரிவினைக்கு இக்பால் ஆதரவாளர் அல்லர்' என்பதைக் காட்டிச் சான்றுகளை 'அலைந்து தேடி' வெளியிடுகிறார்கள், நமக்கு இதில் 'மனவருத்தம்' இல்லை. உண்மை வரலாறு, விடுதலை வரலாறே; போராட்ட வரலாறே. மக்களைத் தலை நிமிரச்செய்யும் தகுதியுடையதே. ஆகவே, இந்த 'வரலாறு'கள் நமக்கு-நம் தேசிய இன விடுதலை உணர்வுகளுக்கு உரமாக உதவும் என்ற நம்பிக்கை நமக்குள்ளது.

நாம் தமிழர்க்குச் சொல்வதெல்லாம்,

'அடிமை நிலையைத் 'தூதூ' வென்று எள்ளியாடி வா.
போராளியாகத் துள்ளி எழுந்து வா,
அதற்கான வரலாறுகளைப் படித்து வா, எழுதி வா!'

என்பதாகவே இருக்கும்.

2. துக்ளக் 'சோ'விடம் எச்சரிக்கை!

தோழமை நெஞ்சங்களே,

'துக்ளக்' இதழைப் படித்திருப்பீர்கள். அதில் நாளிதழ்களுக்குக் குறிப்பாகத் 'தேசியத் தாளிகைகளுக்கு'ச் சில அறிவுரைத்தலைகளைச் 'சோ' வழங்கியுள்ளார். இவர் 'தேசம்' இந்தியாதான். இந்தியாவில் உள்ள 'தேசிய இனங்கள் - பண்பாடுகள்' பற்றி இவருக்கு எந்த அக்கறையும் இருக்கவேண்டிய கட்டாயமுமில்லை. இவர் எழுதிய ஆசிரியவுரையின் சாரம் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

தி.மு.க.-விற்கு, அ. இ. அ. தி. மு. க.-வை எதிர் வைத்துத் தமிழக மக்களிடம் படிப் படம் போட்டும், போலிமைகளை விளையாட்டாய்ப் புலப்படுத்தியும் அறிவு அரிப்பைத் தணித்துக் கொள்ளத் 'துக்ளக்' உதவுகிறது. இந்த 'வணிக அரசியலில்' சாய்கால் பெற்றிருக்கும் 'சோ'விடம் நாம் பெறவேண்டிய எச்சரிக்கை ஒன்றுள்ளது;

மாநிலக் கட்சிகளின் சாய்காலைப் பெரிதுபடுத்தாமல், இந்தி(ய)த் தேசியக் கட்சிகளைப் பெரிதுபடுத்திச் செய்தி போடும்படியும், பெரிய-பெரிய தலைப்புகளில் அடிக்கடி மக்களின் கவனத்தில் படும்படியும் செய்தல் வேண்டும் என்றும் 'சோ' சுட்டிக் காட்டி எச்சரித்துள்ளார்.

எனவே, தேசிய-தமிழின உணர்வு வெளிப்படும் இயல்பான போராட்ட வளர்ச்சியை மூடி மறைக்க விலகிரு வலிவுடைய அதிகார மிடுக்கேறிய ஆளும் கும்பலின் இந்தி(ய) தேசியத்திற்கு 'வாய் உதவி' அறிவுறுத்தல் செய்யும் 'சோ'வின் முகத்திரையைக் கிழியுங்கள்!

கீழ்மையான, கையூட்டான, எச்சிலைப் பதவிக்கு அலையும் 'தமிழகக் கட்சிகள்' 'சோ'வின் அடி மண் ஆசையைப் புரிந்து கொள்ளப் போவதில்லை. ஆனால், நாம் அப்படியிருத்தல் ஆகாது; புதிய தமிழின தேசியப் பண்பாட்டைக் காத்து, இந்திய - உலக ஒருமைமையைக் காக்க விரும்பும் பாட்டாளித் தமிழரே! - உங்கள் பாதை, மக்கள் பாதையாக மலர்க!

3. நம் மெய்யியல்!

மார்க்சும், ஏங்கல்சும் செருமானிய மெய்ம்ம (தத்துவ) இயலில் காட்டிய ஆர்வம், நம்பிக்கை, வளர்ச்சிக்குப் பட்ட பாடு, அதன் மேன்மையில் கொண்டிருந்த ஈடுபாடு பற்றி அவர்களின் நூல்களிலே காணமுடிகிறது.

நாம் நமது மெய்யியல் வரலாற்றைத் தோழர் குணா போன்றவர், மார்க்சியநெறியில் தொட்டு எழுதியதை நாமும் 'தொட்டுக் கும்பிட' வேண்டியவர்களாக உள்ளோம்;

தோழர் பெருஞ்சித்திரனாரை ஒரு மொழி அறிஞர்— பாவலர் -தமிழ் நெறியர் என்று கருதி அவரை வழிபட்டாலும், அவர்தம் நீண்ட தொலைநோக்கில் பெற்ற பழம் தமிழ் மெய்யியல் வரலாற்றை மார்க்சிய நெறியில் ஆராய முன்வருகின்றவர்கள் அரிதாக உள்ளனர்.

நேர்முறையில் அல்லது எதிர்முறையில் அணுகவும் மாட்டாமல் 'புறக்கணிப்'பில் செயல்படும் 'மார்க்சிய இயலாளர்' சிலர் இங்கே இருப்பது புலப்படவே செய்கிறது;

தனித்தமிழ் மூலம் ஒரு தேசிய இனப் பண்பாட்டைத் துல்லியமாக வெளிப்படுத்தி வரும் அறிஞர்களை, பாவலர்களை ஆய்வு நோக்கில் காண்பவர் சிலரே. அதிலும், மார்க்சிய ஆய்வுக்குட்படுத்துபவர் அரிதாகவே உளர்.

தமிழர் மெய்யியல் வளர்ச்சியைப் படித்தறிய அறிஞர் பெருஞ்சித்திரனாரின் எண்ண வளர்ச்சி-மலர்ச்சிகளை மார்க்சிய நோக்கில் காண முயலுதல் வேண்டும்.

அதற்கான தொகுப்பு, பகுப்பாய்வுகளைத் தாட்டுங்களே தோழர்களே!

கனன்றெழுக; எழுக!

—கொடுமுடி க. அ. ஒளியவன்.

பலநூறு ஆண்டுகள் சென்றுமே இன்னுமிப்
பைந்தமிழர் திருந்த வில்லை!
பணத்துக்குத் தன்மானம் இழந்துபண் பாட்டினைப்
பறிகொடுக்க வருந்த வில்லை!

குலம்ஒன்று தானென்று குமலியே காட்டிக்
கொடுத்திட நாண வில்லை!
குற்றேவல் செய்யாமல் ஆளுமை புரிகின்ற
கொள்கையைப் பேண வில்லை!

புலமையைச் சிறிதாக்கிப் புன்மையைப் பெரிதாக்கிப்
புகழ்ந்திட மறுக்க வில்லை!
புதிதுபுதி தாய்ப்பிறர் அடிகளை வருடியே
பூத்தூவ வெறுக்க வில்லை!

கலம்ஏறிக் கடல்தாண்டி ஞாலத்தில் பேராட்சி
கண்டதந் தமிழர் குலமே!
காலத்தால் இன்னணம் கவின்குலைந் திட்டதைக்
கருதவே கருகும் உளமே!

நல்லெண்ணம் நல்செய்கை நல்லபண் பாடென்று
நமக்குண்டே உரிமை கொண்டு
நாகரிக மாகநந் தமிழ்மரபு வளர்ந்ததே
நலிவின்றி வலிவு மொண்டு!

இன்லையே பண்டுநாம் இருந்தநிலை யென்கிறோம்!
இருக்கின்ற தாநல் ஒழுங்கு?
இதுபற்றி யெண்ணாதே சுவைபடச் சோற்றையே
உருட்டியே நாளும் விழுங்கு!

புல்லாகப் பூடாகப் புழுவாக விலங்காகப்
பிறக்காமல் தமிழ னாகப்
புத்தறிவி லாமல்ஏன் பிறந்தாயோ? முன்னவர்
புகழ்கெட இழிஞ னாக!

கொல்கின்றார் உன்னைத்தான் உலகெங்கும்! அய்யகோ...
கூர்மழுங்கி விட்ட தமிழா!
கொற்றமிகு தமிழ்க்குலம் பெற்றகறை நீங்கச்செங்
கோலோச்சக் கனன்றெ ழுகவே!

துள்ளது வருந்தத்தக்கது. மலரப்போகும் "தமிழீழத்தின் செழுமையில் தொல்லைப்படுத்தும் தொற்று நோய் நிலைப்பாடாகத் தொடர்வது வருத்தத்திற்குரியது. தமிழீழ விடுதலைப் போராளிகளின் இலக்கு, தொலைநோக்கிய அடிப்படைக் காரணங்களை வகுத்துக்கொண்டு செயல்படுத்தப்படும் என்று எண்ணும் ஒரு வழி சிந்தனையே பயன் நல்கும்.

தலைமறைவு இயக்கங்களாக இருக்கும் இக்காலத்தில் ஒருவருக்கொருவர் பகைமை உணர்வுகளை வளர்த்துக்கொண்டு நம் இனத்தையே அழித்துக் கொள்வதால் எந்த மாற்றத்தை நாம் எதிர்கொள்ள இருக்கிறோமோ அந்த மாற்றம், நேர் எதிரான மாற்றமாகவே நிகழும் என்பதை அறிந்திட வேண்டும். அறியாதவர்களல்லர்.

எந்த அமைப்பையும், எவரையும், எங்குமுள்ள எவரும் (உண்மைத் தமிழர்) குறைத்து மதிப்பிட்டதில்லை. துமுக்கியில் காணப்படும் வேகம்; போராளிகள் ஒற்றுமையில் காணப்பட்டால் நன்றாக இருக்கும்.

-பாவலர். இராவணதாசன், சென்னை-3.

0:1164: பேரன்பிற்கும், பெருமதிப்புக்குமுரிய தமிழினக் காவலர் ஐயா அவர்களுக்கு உங்கள் அன்புத் தொண்டர், கரிகாலன் வணக்கத்துடன் வரையும் அன்பு மடல். ஐயா! நான் இரண்டு தடவைகள் சென்னை வந்தேன். முதல் தடவை நீங்கள் மலேசிய நாட்டிற்குச் சுற்றுச்செலவு மேற்கொண்டதையும், அடுத்த முறை நான் வந்தபோது, நீங்கள் 16-6-86 பக்கலில் தாய்நிலம் தமிழகம் திரும்புவதாகவும் பொழிலன் அவர்கள் இனிப்பான செய்தியினைக்கூறி, எனது நெஞ்சினில் தேனை இனிக்கச் செய்தார். இந்த நாளில் எத்தனையோ தலைவர்கள் எல்லாம் வெளிநாடு சுற்றுச்செலவு மேற்கொள்கிறார்கள். அந்தப் பயணங்கள் அவர்களின் பொழுது போக்கு (உல்லாசம்), பொருள் சேர்க்கை என்னும் வகையில், தந்நலமேதான் மேலோங்கி நிற்கின்றன. மக்களின் நலன்களுக்காகத் தங்கள் வெளி நாட்டுப் பயணங்களைப் பயன்படுத்திக் கொண்டவர்கள் தந்தை பெரியார், பெருந் தலைவர் காமராசர் போன்ற தலைவர்களே.

இத்தகைய தலைவர்களின் குணநலன்களை இன்றைய தலைவர்களிடத்தில் காண முடியவில்லை. ஆனால், கனவிலும், நனவிலும், மொழி, இனம், நாடு இவற்றின் விடுதலையே தம்மின் உயிர் மூச்சாகக் கொண்டு, மிகுதியான செல்வச் செழிப்போடு தமிழ் இனம் வாழ்கின்ற நாடுகளுக்குச் சுற்றுச் செலவு மேற்கொண்டு வெற்றியோடு திரும்பி இருக்கும் எங்கள் தலைவர் பாவலரேறு ஐயா அவர்களின் பயணம், தமிழின மீட்சிக்குக் கடைகாலாக அமையும் என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்படுகிறது. ஐயா அவர்களைச் சந்திக்க மிக்க ஆவலுடன் இருக்கிறேன். வணக்கம்.

-உங்கள் அன்புத் தொண்டன். -கரிகாலன், வீரமங்கலம்.

0:1165 பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்கள்.

தங்களின் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம் ஆகியவற்றைக் கடந்த பல திங்களாகப் படித்து வருகிறேன். தங்களின் தனித் தமிழ்நாடு முயற்சி விரைவில் வெல்லட்டும்! தங்களின் தனித்தமிழ் நாடு முயற்சிக்கு நானும் என்னால் இயன்ற பணியைத் தங்களுக்குப் புரிவேன்.

- ச. சாகிர் உசேன் சென்னை-23

0:1166 பெருந்தகையீர், வணக்கம் தமிழின் தூய்மையைக் காக்க, தேவையற்ற பிறமொழிச் சொற்கள் தமிழில் வந்தேறு வதைத் தவிர்க்க, வழக்கற்றுப்போன நற்றமிழ்ச் சொற்களை மீண்டும் உலகவழக்கில் கொணர நாமெல்லாம் முயன்றால், சிலர் நம்மைத் 'தமிழ் வெறியர்' என்று கூற முனைகின்றனர்.

மொழிக் கலப்பினைத் தவிர்க்க நாம் மட்டும்தாம் முயலு கிறோம் என்பதில்லை. உலகமெங்கணும் இத்தகு முயற்சிகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டே வருகின்றன,

அண்மையில் பிரான்சு நாட்டில், பிரெஞ்சு மொழியில், ஆங்கிலச் சொற்கள் வந்தேறிக் கலப்பதை எங்ஙனம் தவிர்க்க லாம் என்பதைக் கண்டறிய மூன்று நாள் மாநாடொன்று நடைபெற்றது. முகாமையாகப் பிரெஞ்சு மொழி பேசும் 42 நாடுகள் பங்கேற்றன. கலந்துகொண்டோரில் 15 (குடியரசு) நாட்டுத் தலைவர்களும் 11 முதலமைச்சர்களும் அடங்குவர்.

மூன்று நூற்றாண்டுகட்கு முன் பிரித்தானிய நாட்டு மேட்டுக்குடியினரின் நாகரிகப் பேச்சு மொழியாக இயங்கியது பிரெஞ்சு மொழியே என்பது குறிப்பிடத்தக்கது. இப்போதும் ஆங்கில மொழியில் எண்ணிறந்த பிரெஞ்சு மொழிச் சொற்கள் விரவிக் கலந்துள்ளன. பிற

-தங்களன்புள்ள, அரங்க முருகையன்.

பிரெஞ்சு மொழியைத் தூய்மை செய்யும் முயற்சி பற்றிய கருத்தரங்கச் செய்தி வருமாறு ;

The French have a word for it.

PARIS: The world's 42 French-speaking nations yesterday opened a three-day summit at Versailes attended by 15 presidents and 11 prime ministers.

The object of the meeting is to defend the purity of the French language, in particular from the dreaded Anglo Saxon corruptions of 'Franglais'

தென்மொழிப் புரப்பாளர் இளமுருகனார் அன்னை மறைவு !

நெடுநாளைய தென்மொழி அன்பரும், தென்மொழிப் புரப்பாளரும், புன்செய்ப் புளியம்பட்டி, மறைமலையடிகள் மன்றச் செயலாளரும், தென்மொழிக் குடும்ப அன்புறவாளரும் ஆகிய திரு. கா. இளமுருகனார் அவர்களின் அன்னையார் க. சென்னம்மாள் 70-ஆம் அகவையில், கடந்த 10-7-86 அன்று பிற்பகல் 3 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முன்னரே தந்தையாரை யிழந்த பெருந்துயர் தீரும் முன்னர் இக்கால் அன்னையாரையும் இழந்து கையற்று நிற்கும் திரு. இளமுருகனார் அவர்களுக்கும், அவர் குடும்பத்தினர்க்கும் தென் மொழியும், ஆசிரியரும் அவர் குடும்பமும் தங்கள் ஆழ்ந்த இரங் கலைத் தெரிவித்துக் கொள்கின்றனர். அம்மையார் ஆதன் அமைதியுற் றுய்க!